விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 060 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 05 வெள்ளிக்கிழமை (17.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## மின்வெட்டு இனி இல்லை

03 ஆம் பக்கம் பார்க்க

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவரின் அலுவலகத்துக்கு சீல்

03 ஆம் பக்கம் பார்க்க

## மாற்றுவழிகளை ஆய்வு செய்த பின் இறுதித் தீர்மானமே மின்கட்டண உயர்வு

### மின்சக்தி அமைச்சர் கஞ்சன



(கொழும்பு)

மாற்றுவழிகளை ஆய்வு செய்த பின் இறுதித் தீர்மானமே மின் கட்டண உயர்வு என மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களுக்கு பின்னரே மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மாற்றுவழிகளை ஆய்வு செய்ததன் பின்னர் இறு 11

## மின்கட்டண அதிகரிப்பின் எதிரொலி

# பொருட்கள், சேவைகள் விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

- சோற்றுப் பார்சல், கொத்து, ப்ரைட் றைஸ் விலைகள் அதிகரிப்பு.
- 20% ஆடை விலைகள் உயர்வு.
- புகைப்படப் பிரதியின் விலைகள் அதிகரிப்பு.
- பேக்கரி பண்டங்களின் விலைகள் உயர்வு.

நாட்டில் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து சில துறைசார் விலைகள் மற்றும் கட்டணங்களையும் உயர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, உணவுப் பொருட்களின் விலைகளும் நிர்மாணத் துறை, தொடர்பாடல் சேவை, கைத்தொழில் மற்றும் உற்பத்தி தொழிற்துறையுடன் தொடர்புடைய கட்டணங்களும் உயர்த்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிற்றுணவகங்களில் விற்பனை செய்யப்படும் உணவுப் பொதி, ப்ரைட் ரைஸ் மற்றும் கொத்து ஆகியவற்றின் விலைகள் 10 சதவீதத்தால் 02

## 6 அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

லங்கா சதொச நிறுவனம் நேற்று வியாழக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் மேலும் 6 அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைத்துள்ளது.

இதற்கமைய, ஒரு கிலோ உருளைக் கிழங்கு 20 ரூபாயினால் குறைக்கப்பட் 11

## சாவகச்சேரியில் தமிழ் பொலிஸார் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்வயல் கிராமத்தில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் இளம் பொலிஸ் உத்தியோகத்தர் 11

## மின்கட்டண அதிகரிப்பு நாடளாவிய ஹர்த்தால் நடவடிக்கைக்கு அவதானம்

(கொழும்பு)

மின் கட்டண அதிகரிப்புக்கு எதிரான போராட்டத்தில் 74 இலட்ச மின்பாவனையாளர்கள் ஒன்றிணைய வேண்டும். நாடளாவிய ரீதியில் ஹர்த்தால் நடவடிக்கையில் ஈடுபட அவதானம் செலுத்தியுள்ளோம்.

மின்கட்டண அதி 11

## நாட்டில் தடையின்றி மின்சாரம் வழங்குவதனை உறுதி செய்க

### ஜனாதிபதி ரணில் பணிப்புரை



(கொழும்பு)

மின் கட்டண திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், தடையின்றி மின்சாரம் வழங்குவதை உறுதி செய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் கஞ்சன விஜேசேகர விற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

குறைந்த வருமானம் 11

## யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனை தொடர்பில்

### மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் ஆராய்ந்துள்ளனர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரும் ஓய்வுபெற்ற நீதியரசர் ரோஹினி மாரசிங்க தலைமையிலான ஆணைக்குழுவின் உயர்மட்ட குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் விஜயம் செய்திருந்தனர்.

குறிப்பாக ஆணையாளர், செயலாளர், விசாரணைப் பணிப்பாளர், சட்ட அலுவலர்கள் அடங்கிய குழுவினர் விஜயம் மேற் கொண்டிருந்தனர்.

இதன்போது இல 11

## மின்கட்டண உயர்வால் 0 முதல் 90 அலகுகளை பயன்படுத்துவோருக்கே

### கடும் பாதிப்பு ஏற்படும்

(கொழும்பு)

மின் கட்டண உயர்வானது, 0 முதல் 90 அலகுகள் வரை மின்சாரத்தைப் பயன்படுத்தும் பாவனையாளர்களுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 30 அலகுகள் வரையான மின் பாவனையாளர்களுக்கு, 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பாராளுமன்றத்தைக் கூட்ட உடன் நடவடிக்கை எடுக்குக

## பிரதமர், சபாநாயகரிடம் கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத்தை உடனடியாக கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மற்றும் சபாநாயகரிடம் சுதந்திர மக்கள் கூட்டமைப்புக் கோரிக்கை விடுத்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் எழுந்துள்ள சிக்கல் நிலை குறித்து கலந்துரையாடுவதற்கு உடனடியாக பாராளுமன்றத்தை கூட்டுமாறும் குறித்த கடிதத்தில் கூட்டமைப்பு கோரியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்குச் சீட்டு விநியோகத்தை காலவரையறையின்றி ஒத்திவைக்கும் தீர்மானம் ஜனநாயகத்திற்கு பாரிய அச்சுறுத்தல் என சுதந்திர மக்கள் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலைமையை நிவர்த்தி செய்வதற்கும், நிர்வகிப்பதற்கும் அரசாங்கத்தின் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் உச்ச சட்ட சபையின் பிரதிநிதிகளின் பொறுப்பு இருப்பதால், நிலையியற் கட்டளை 16இன் கீழ் பாராளுமன்றத்தை கூட்டுமாறு பிரதமர் மற்றும் சபாநாயகரிடம் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (ம-7)

### நுவரெலியாவில் கிரகரி வாவியில்

# இனந்தெரியாத நபரின் சடலம் ஒன்று மீட்பு

(நுவரேலியா)

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரகரி வாவியில் நேற்று மாலை சடலம் ஒன்று மீட்கப்பட்டதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமொன்று மிதப்பதைக் கண்டு பிரதேசவாசிகள் நுவரெலியா பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். அதன்பின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் இதுவரை யாருடையது என அடையாளம் காணப்படவில்லை. சடலம் உருக்குலைந்த நிலையில் இருப்பதன் காரணமாக ஆணா அல்லது பெண்ணா என பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வாவியில் பாய்ந்து உயிரிழந்தாரா அல்லது எவராவது கொலை செய்து வாவியில் எறிந்து சென்றார்களா என்பது தொடர்பாக பல கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

### கடவுச் சீட்டை பெற

# இலஞ்சம் பெற்ற 4 பேர் கைது

(கொழும்பு)

ஒரு நாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டு வழங்குவதற்காக இலஞ்சம் பெற்ற 4 பேரை இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் அலுவலக உதவியாளர் ஒருவரும் 3 தரகர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு நாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டு வழங்குவதற்காக 42,000 ரூபாய் லஞ்சம் பெற்றுள்ளனர்.

இதன் மூலம் கடவுச்சீட்டு பெறுவதற்காக 22,000 ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய 20,000 ரூபாயை சந்தேகநபர்கள் பகிர்ந்து கொண்டுள்ளனர். (ம-7)

# தேர்தலுக்கான நிதி நெருக்கடியை பேச்சுவார்த்தை மூலம் தீருங்கள்

## தேர்தல் கண்காணிப்பு நிலையம் கோரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான செலவினங்களுக்கான நிதியை வழங்குவது தொடர்பான சிக்கல் நிலைமைகளை சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே பேச்சுவார்த்தைகள் மூலம் பெரும் நெருக்கடியாக மாற்றுவதற்கு முன்னர் தீர்வு காணுமாறு இலங்கை தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் வலியுறுத்தியுள்ளது.

இது போன்ற சூழ்நிலை ஏற்படக்கூடும் என்று முன்னரே நாம் எச்சரித்திருக்கின்றோம். திறைசேரி, அரசாங்கம் மற்றும் தேர்தல் ஆணைக்குழு ஆகிய மூன்று தரப்பினருக்கும் இடையே உடனடியாக ஒரு பேச்சுவார்த்தையை நடத்துமாறு வலியுறுத்தியிருந்தோம். அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இன்று இந்த நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்காது.

அத்தோடு தற்போது அரச உத்தியோகத்தர்களை அச்சுறுத்தி சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சில அதிகாரிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது.

இவ்வாறான அச்சுறுத்தல்கள் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் தேர்தலில் மிகவும் பாதகமான விளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம்.

இலங்கை தற்போது வங்குரோத்து நிலையைப் பிரகடனப்படுத்திய நாடாக உள்ளது என்பது பலரும் மறந்து போகும் உண்மையாகும்.

இவ்வாறான நிலையில் பொதுமக்களின் குறைந்தபட்ச அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கப் பணத்தை முழுமையாகச் செலவிட வேண்டியுள்ளது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

எனவே, குறிப்பிட்ட காலத்தில் தேர்தலுக்குத் தேவையான பணத்தைப் பெறுவதற்கான வேலைத்திட்டம் அனைத்துக் கட்சிகளுக்கும் இடையில் இணக்கப்பாட்டின் மூலம் உருவாக்கப்பட்டு, தேர்தலை நடத்துவதற்கான உரிய திட்டத்தை உடனடியாகத் தயாரிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

# ஜே.வி.பி. தலைவர் இன்று யாழ் விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திசாநயக்க இன்று யாழ் விஜயம் செய்யவுள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலை முன்னிட்டு இன்றையதினம் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான பரப்புரை யாழில் நடைபெறவுள்ளதனால் அதில் கலந்து கொள்வதற்காக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க இன்று யாழ் வருகின்றார்.

மேலும் குறித்த கூட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் ஏனைய உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி சபை வேட்பாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-7)

# சமூக பாகுபாட்டை சுட்டிக்காட்டி பேசியதால் கட்டையால் தாக்கினேன்

## அத்தியடியில் பெண்ணை தாக்கிய சந்தேக நபர் வாக்குமூலம்

குடும்பப்பெண் ஒருவரை அடித்துக் கொலை செய்து தலைமறைவாகியிருந்த நபர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

சமூக பாகுபாட்டை சுட்டிக்காட்டி பேசியதனால் ஏற்பட்ட சடுதியான கோபத்தினால் பெண்ணை தாக்கியதாக சந்தேக நபர் வாக்குமூலம் வழங்கினார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் அத்தியடியில் 55 வயதுடைய பெண் இரு நாட்களுக்கு முன் அடித்து கொலை செய்யப்பட்டார். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். இந்நிலையில் சந்தேக நபர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார்.

உயிரிழந்த பெண்ணுடன் 10 ஆண்டுகளாக நட்புறவாடி வருகின்றேன். அவர்கள் வீடு மாறுவதற்கு உதவுவதிலிருந்து பல உதவிகளை வழங்கி வந்தேன்.

தண்ணீர் குழாயை நிலத்துக்கு அடியில் புதைப்பதற்காக கிடங்கு வெட்டச் சொன்னார். எனது வீட்டில் கூலி வேலைக்கு போவதாக அறிந்தால் பிரச்சினை என நான் கூறிய போது, அவர் என்னை சமூக வேறுபாடு சொல்லி பேசிவிட்டார்.

அதனால் ஆத்திரத்தால் அவரை கட்டையால் தாக்கிவிட்டேன். அவர் உயிரிழந்துவிட்டார் என்று சந்தேக நபர் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். (ம-7.33)

# பொருட்கள்...

அதிகரிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை சிற்றுணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், சிற்றுண்டிகள், பால்தேநீர், அப்பம் உள்ளிட்ட கோதுமை மாவினால் தயாரிக்கப்படும் உணவு பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படமாட்டாது என அந்த சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தும், பேனை, பென்சில், உள்ளிட்ட உபகரணங்கள் மற்றும் பிரதிகள் எடுப்பதற்காக அறவிடப்படும் கட்டணங்களை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை தொடர்பாடல் நிலைய உரிமையாளர்கள் தலைவர், இந்ரஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

தற்போது தமது சேவைகளின் கட்டணங்களை அதிகரிக்க நேரிட்டுள்ளது. அதன்படி, சாதாரணமாக பிரதி ஒன்றை எடுப்பதற்கான கட்டணத்தை, குறைந்தது 5 ரூபாயால் அதிகரிக்க வேண்டியுள்ளது.

[illegible] உள்ளிட்ட அனைத்து சேவைகளின் விலைகளையும் அதிகரிக்க நேரிட்டுள்ளது.

எனினும், அதிகரிக்கப்படவுள்ள உறுதியான கட்டணங்கள் தொடர்பில் அறிவிக்க முடியாது என தொடர்பாடல் நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மின் கட்டண அதிகரிப்பால், கைத்தொழில் துறைசார் செலவினங்களும் அதிகரித்துள்ளதாக சிறு கைத்தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவர் நிலுக்ஷ தெரிவித்துள்ளார்.

உணவு பொதியிடலுக்காக பயன்படுத்தும் 3 ரூபாயுக்கு விற்பனை செய்யப்பட்ட லன்ச் சீட் தற்போது 5 ரூபாயாக அதிகரிக்கப்படும். உணவு பொதியிடல் காகிதமும் 5 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படும்.

இந்தநிலையில், உணவு பொதியிடலுக்காகப் பயன்படுத்தப்பட்ட அனைத்து பொருட்களும் 15 முதல் 20 சதவீதம் வரையில் விற்பனை செய்யப்படும்.

இவையனைத்தும் தமது தொழிற்கட்டமைப்பை பாதுகாத்து கொள்வதற்காகவே அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், தற்போதைய நிலையில், நிர்மாணத்துறை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக நேரிடும் என நிர்மாணத்துறை சேவை சங்கத்தின் தலைவர் சுபுன் அபேசேகர தெரிவித்துள்ளார்.

மேலும் பேக்கரி பண்டங்களின் விலைகள் அதிகரிக்கப்படவுள்ளதாக தென் மாகாண சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பேக்கரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதீத மின் கட்டண உயர்வால் பேக்கரி தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் கமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பேக்கரி தொழிலில் மாவு பிசைவது முதல் பாண் சுடுவது, உணவு தயாரிப்பது, கடையில் சந்தைப்படுத்துவது வரை மின்சாரம் இன்றியமையாதது.

பேக்கரி தொழிலை எப்படித் தொடர முடியும்? அண்மைய நாட்களாக காஸ் விலை உயர்த்தப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக பேக்கரி உணவுகளின் விலையை தயக்கத்துடன் அதிகரிக்க வேண்டியுள்ளது என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி மின்வெட்டு இல்லை

## மின்சக்தி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இனி மின்வெட்டு அமுல் படுத்தப்பட மாட்டாது என மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதன் பின்னணியில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. மின் கட்டணத்தை செலுத்துவதில் நிதி நெருக்கடியை எதிர்கொள்பவர்கள் தொடர்பில், நிதி அமைச்சு எதிர்காலத்தில் தீர்மானிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன் கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் 66 சதவீதத்தால் மின்சாரக் கட்டணம் அதிகரிப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியிலும் சமஷ்டி தீர்வுக்கு இடமில்லை

## லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

**“அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு முழு மையான ஆதரவை நாம் தெரிவித்தாலும் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியிலும் சமஷ்டி தீர்வுக்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது.” இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உப தலைவரும் எதிரணி பிரதம கொறடாவுமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**



இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

“13 ஆவது திருத்தச் சட்டம் இலங்கை அரசமைப்பின் ஓர் அங்கம். அதற்கு ஐக்கிய மக்கள் சக்தி முழுமையான ஆதரவை வழங்குகின்றது.

அதேபோல் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள பொலிஸ், காணி அதிகாரங்கள் தொடர்பில் சர்ச்சை நிலை காணப்படுகின்றது. அனைவரும் பேசி இவ்விரு அதிகாரங்கள் தொடர்பில் பொது இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால்கூட பொலிஸ், காணி அதிகாரங்கள் தொடர்பில் இணக்கப்பாடு இல்லையேல் அவற்றை அமுல்படுத்த முடியாது. 13 இல் உள்ள ஏனைய விடயங்கள் வழங்கப்படும். அத்துடன், சமஷ்டி தீர்வை நாம் ஆதரிக்கவே மாட்டோம்” என அவர் தெரிவித்தார். (நி)

### யாழ்ப்பாணம் உள்ளிட்ட

# 12 மாவட்டங்கள் அபாய வலயங்களாக பிரகடனம்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

12 மாவட்டங்களில் டெங்கு அபாய நிலைமை காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தறை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், கேகாலை, இரத்தினபுரி மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களும் டெங்கு அபாய வலயங்களாக பெயரிடப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த மாதத்தில் இதுவரை 3,637 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். (நி)

# 24 மணித்தியாலங்களில் 32 இடங்களில் நிலநடுக்கங்கள்

## உலகம் முழுவதும் பதிவாகின

(மணிலா)

நேற்று முன்தினம் 24 மணித்தியாலங்களில் உலகம் முழுவதும் 32 இடங்களில் நிலநடுக்கங்கள் உணரப்பட்டுள்ளன.

இந்த நிலநடுக்கங்களில், அதிகபட்சமாக 6.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் பிலிப்பைன்ஸில் பதிவாகியுள்ளது.

அத்துடன், நியூசிலாந்து, அலாஸ்கா, கொலம்பியா, டோங்கா, பொலிவியா உள்ளிட்ட பல நாடுகளில் 5 ரிக்டருக்கு மேல் வலிமை கொண்ட நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

பயங்கர சோகத்தை எதிர்கொண்ட துருக்கியில் 4.6 ரிக்டர் அளவிலான நிலநடுக்கமும் பதிவாகியுள்ளது.

இதேவேளை, இந்த நிலநடுக்கங்களினால் ஏற்பட்ட சேத விபரங்கள் தொடர்பான தகவல்கள் எவையும் இதுவரையில் பதிவாகவில்லை. (நி)

# ஜனக்க ரத்நாயக்கவின் காரியாலயத்திற்கு சீல்

(கொழும்பு)

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் ஜனக்க ரத்நாயக்கவின் காரியாலயம் பொலிஸாரினால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கமைய இவ்வாறு சீல் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொள்ளுப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த சிலர் குறித்த அலுவலகத்தில் உள்ள முக்கிய ஆவணங்களை அழிக்க முயற்சிப்பதாக கொள்ளுப்பிட்டி பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, கொள்ளுப்பிட்டி பொலிஸாரால், கோட்டை நீதவான் நீதிமன்றில் உண்மைகளை அறிக்கையிட்டு பெற்றுக்கொண்ட நீதிமன்ற உத்தரவின் பிரகாரம், சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

ஜனக ரத்நாயக்க தற்போது வெளிநாட்டில் இருப்பதாகவும், அவர் இலங்கை திரும்பிய பின்னர் உரிய அலுவலகம் திறக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

# நன்கொடையை நம்பியிருக்க வேண்டிய நிலையில் மஹரகம புற்றுநோய் மருத்துவமனை

(கொழும்பு)

மஹரகம புற்றுநோய் மருத்துவமனை உட்பட நாட்டின் பல மருத்துவமனைகளில் மருந்துகளிற்குத் தட்டுப்பாடு காணப்படுவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மக்கள் வழங்கிய நன்கொடை காரணமாகவே மஹரகம மருத்துவமனை செயற்படுகின்றது என குழந்தை புற்றுநோயியல் நிபுணர் சஞ்சீவ குணசேகர தெரிவித்துள்ளார்.

மருத்துவமனைக்கு நன்கொடைகளை வழங்க ஆர்வமுள்ளவர்கள் மருத்துவமனையின் இயக்குநரை தொடர்பு கொள்ளலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

நன்கொடைகளிற்காக மருத்துவமனையில் தனிப் பிரிவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# மின்கட்டண உயர்வால் ஆடை விலையும் அதிகரிப்பு

(கொழும்பு)

மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அனைத்து தைத்த ஆடைகளின் விலையையும் 20 சதவீதத்தால் உயர்த்த வேண்டியுள்ளதாக ஆடை உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அமைச்சர் காஞ்சன விஜேசேகர சட்டவிரோதமான முறையில் மின்சார கட்டணத்தை அதிகரித்துள்ளதாகவும் இது முழு தொழில் துறைக்கு பாரிய பிரச்சினை எனவும், இதனால் தொழில் முறை வீழ்ச்சியடைந்து வருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (நி)

# சப்ரகமுவ பல்கலையில் மோதல் 9 மாணவர்களுக்கு காயம்

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் குழுவிற்கு இடையில் இடம்பெற்ற மோதலில் 9 பேர் காயமடைந்துள்ளனர்.

குறித்த பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் முதலாம் வருட மாணவர்களுக்கும் விடுதியிலுள்ள மாணவர்கள் குழுவிற்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு மோதல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது காயமடைந்த 9 மாணவர்கள் பலாங்கொட மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (நி)

# தேர்தலை பிற்போட்டால் மக்களுடன் வீதிக்கு இறங்குவோம்

## அநுரகுமார எச்சரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலை எப்படியாவது பிற்போடுவதே ஜனாதிபதியின் திட்டம் எனவும் அவர் அந்த வழியிலேயே பயணிப்பாரானால் அதற்குப் பதிலடி கொடுப்பதற்கும் தாங்கள் தயார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலட்சக்கணக்கான மக்களுடன் வீதிக்கு இறங்குவோம் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (நி)

# கொத்து, ப்ரைட்ரைஸ் விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

மின் கட்டண அதிகரிப்பினால் சோறு, ப்ரைட் ரைஸ் மற்றும் கொத்து ஆகியவற்றின் விலையானது நூற்றுக்கு 10 வீதம் அதிகரிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச் சாலை உரிமையாளர்களின் சங்கம் அறிவித்துள்ளது.

அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் இதனை தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அப்பம் உள்ளிட்ட ஏனைய கோதுமை உணவு பொருட்களின் விலை அதிகரிக்கப்படாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் உலகக் கிண்ண
# மே. தீவுகளை வீழ்த்தியது இந்தியா



மகளிர் இருபது-20 உலகக் கிண்ணத்தில் நேற்று முன்தின ஆட்டத்தில் மேற்கிந்திய தீவுகள் அணியை 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய மேற்கிந்திய தீவுகள் அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 118 ஓட்டங்கள் எடுத்தது.

119 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி 18.1 ஓவரில் 4 விக்கெட்டுகளை இழந்து வெற்றி பெற்றது.

இந்திய அணியில் அதிகபட்சமாக விக்கெட் கீப்பர் ரிச்சா கோஷ் 32 பந்துகளில் 44 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந் தார்.

போட்டியில், 3 விக்கெட்டுகளை கைப்பற்றிய தீப்தி சர்மா சர்வதேச இருபது-20 போட்டிகளில் 100 விக்கெட்டுகள் எடுத்த முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையை பெற்றார். அவர் ஆட்டநாயகியாக் அறிவிக்கப்பட்டார்.

இந்தப் போட்டியில் இந்தியாவின் இரண்டாவது வெற்றி இதுவாகும், மேற்கிந்திய தீவுகள் அணிக்கு இது இரண்டாவது தோல்வி. (4)

# இங்கிலாந்துக்கு எதிராக டெஸ்ட்
# நியூசிலாந்து தடுமாற்றம்

நியூஸிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின், முதல் நாள் ஆட்டம் நேற்று நிறைவுக்கு வந்தது.

இதன்படி பதிலுக்கு முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் நியூஸிலாந்து அணி, 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 37 ஓட்டங்களை பெற்றுள்ளது.

ஆட்டநேர முடிவில், டெவோன் கோன்வே 17 ஓட்டங்களுடனும் நெய்ல் வாக்னர் 4 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களுடன் ஒப்பிடுகையில், நியூஸிலாந்து அணி 288 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, முதல் இன்னிங்ஸிற்காக 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 325 ஓட்டங்களை பெற்றிருந்த போது, தனது முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஹரி புரூக் 89 ஓட்டங்களையும் பென் டக்கெட் 84 ஓட்டங்கள்ளயும் பெற்றுக் கொண்டனர்.

இன்னமும் 7 விக்கெட்டுகள் வசமுள்ள நிலையில், போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டத்தை நியூஸிலாந்து அணி இன்று தொடரவுள்ளது. (4)

# மாசி மாத இராசி பலன்கள் 13.02.2023-14.03.2023

## துலாம்

**நீதி, நேர்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் துலாம் இராசிவாசகர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன், பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதி சூரியனுடன் இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் ஆரோக்கியத் தொல்லை அடிக்கடி வரலாம். மருத்துவச் செலவுகள் தவிர்க்க முடியாததாக அமையும். பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுகள் முடிவாகும்.

ஜென்மத்தில் கேதுவும் 7 இல் ராகுவும் இருப்பதால், இன்பமும் துன்பமும் மாறி மாறி வரலாம். இன்பத்தை மட்டுமே எதிர் கொள்ள நினைப்பவர்கள், அதற்குரிய வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது. "ஆறில் குரு ஊரில் பகை" என்பார்கள். எனவே மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்கும். தொழில் மாற்றச் சிந்தனை உருவாகும். புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சி கைகூடும்.

**உச்ச சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி 4 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் சுக்கிரனுக்கு, அது உச்ச வீடாகும். உங்கள் இராசிநாதன் உச்சம் பெறுவது ஒரு அற்புதமான நேரமாகும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவர். கற்ற கல்விக்கேற்ற வேலை கிடைக்கும். கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். வாங்கல் - கொடுக்கல்கள் ஒழுங்காகும். வளர்ச்சிப் பாதை கண்முன் தெரியும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அன்பு நண்பர்களின் ஆதரவோடு தொழில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்ப - புதன் சஞ்சாரம்**

மாசி 9 ஆம் திகதி, கும்ப இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது பூர்வ புண்ணிய ஸ்தானம் வலுப்பெறுகிறது. எனவே பூர்வீகச் சொத்துத் தகராறுகள் அகலும். புதிய திட்டங்களைத் தீட்டி வெற்றி காண்பீர்கள். ஆதாயம் தரும் தகவல் அதிகரிக்கும். வெளிநாடு செல்லும் முயற்சி கைகூடும்.

**மீன - புதன் சஞ்சாரம்**

மார்ச் 25 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்திற்கு அதிபதியான புதன் நீச்சம் பெறுவது நன்மைதான். "கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்" என்பதற்கிணங்க எதிர்பாராத விதத்தில் நற்பலன்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும். ஒரு சிலருக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். சுபகாரியப் பேச்சு கைகூடும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும்.

**மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி 29 ஆம் திகதி, மேஷ இராசிக்கு சுக்கிரன் வருகிறார். உங்கள் இராசிநாதன் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது கல்யாண வாய்ப்புகள் கைகூடும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். பொருளாதாரத்தில் இருந்த ஏற்ற இறக்க நிலை மாறும். வாகன யோகம் உண்டு. வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். ஒரு சிலருக்கு இல்லம் கட்டிக் குடியேறும் வாய்ப்பு உருவாகும். பெற்றோரின் உடல்நலத்தில் கவனம் தேவை. பகையான நண்பர்கள் மீண்டும் இணைவார்கள்.

**மிதுன - செவ்வாய் சஞ்சாரம்**

மார்ச் 30 ஆம் திகதி, மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அங்கிருந்து மகரத்தில் உள்ள சனியைப் பார்க்கப் போவதால், இந்தக் காலகட்டத்தில் மிகமிக கவனத்தோடு இருப்பது நல்லது. உடல் நலத்தில் பிரச்சினைகள் வரலாம். உறவினர் பகை உருவாகும். கடன் சுமை அதிகரிக்கும். வீண் விரயங்களும் வீடு மாற்றமும் உத்தியோக மாற்றமும் திடீரென வந்துசேரலாம். கட்டடம் கட்டும் முயற்சியில் தடைகளும் தாமதங்களும் ஏற்படும். வரன்கள் கைநழுவிச் செல்லலாம்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எடுத்த காரியத்தை முடிப்பதில் சிரமங்கள் ஏற்படும். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதாலும் செவ்வாய், சனி பார்வை ஏற்படுவதாலும் மனக் குழப்பம் அதிகரிக்கும். தம்பதியருக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமல் இருக்க ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுங்கள். சொத்துப் பிரச்சினை மீண்டும் தலைதூக்கும். உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகளை உங்கள் கண்காணிப்பில் வைத்துக் கொள்ளுங்கள். [illegible] க்குப் பல வழி[illegible] ஏற்படும்.

## விருச்சிகம்

**எதிர்காலத்தை இனியதாக மாற்றும் விருச்சிக இராசி வாசகர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத்தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய், தன ஸ்தானத்தை பார்க்கிறார். எனவே பண வரவு திருப்திகரமாக இருக்கும். உங்கள் இராசியின் மீது குரு பார்வையும் பதிவதால், தொழிலில் கூடுதல் லாபம் கிடைக்கும். உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் லாபாதிபதி புதனோடு இணைந்து சனி சஞ்சரிக்கிறார்.

இதனால் தொழில், உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும். குருவின் பார்வை உங்கள் இராசியிலும் 9,11 ஆகிய இடங்களிலும் பதிவதால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து அலைமோதும்.

**உச்ச சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி 4 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் சுக்கிரனுக்கு, அது உச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு சப்தம - விரயாதிபதியான சுக்கிரன், உச்சம் பெறுவது யோகம்தான். திருமண முயற்சிகள் கைகூடும். வாழ்க்கைத் துணை வழியே நன்மைகள் கிடைக்கும். உதிரி வருமானங்கள் வந்து சேரும். புதிய வாகனங்கள் வாங்கி மகிழும் யோகம் உண்டு. பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். இந்த நேரத்தில் இடம், பூமி வாங்குவது அல்லது வீடு கட்டிக் குடியேறுவது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள்.

**கும்ப - புதன் சஞ்சாரம்**

மாசி 9 ஆம் திகதி, கும்ப இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு அஷ்டம - லாபாதிபதியான புதன், 4 ஆம் இடத்திற்குச் செல்லும் பொழுது தாய்வழி ஆதரவு கிடைக்கும். புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். எதிர்பாராத தன லாபம் இல்லம் தேடிவரும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். வாடகைக் கட்டடத்தில் நடைபெறும் தொழிலை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும்.

**மீன - புதன் சஞ்சாரம்**

மார்ச் 25 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். [illegible] அஷ்டமாதிபதியாக [illegible], நீச்சம் பெறுவது ஒரு வகையில் நன்மைதான். அதேநேரத்தில் நீச்சம் பெற்ற புதன், குருவோடு இணைந்து "நீச்ச பங்க ராஜயோக"த்தை உருவாக்குகிறார். இதனால் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும். அரைகுறையாக நின்ற பணிகள் அனைத்தும் நடைபெறும். வெளிநாட்டில் இருந்து நண்பர்கள் மூலம் ஆதாயம் தரும் தகவல் கிடைக்கலாம்.

**மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி 29 ஆம் திகதி, மேஷ இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்திற்கு அதிபதியான சுக்கிரன், 6 ஆம் இடத்திற்கு வரும்பொழுது "விபரீத ராஜயோக" அடிப்படையில் எதிர்பாராத இனிய மாற்றங்கள் வந்துசேரும். உத்தியோக உயர்வும் சம்பள உயர்வும் கிடைக்கலாம். தொழில் நடத்துபவர்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். வளர்ச்சி கூடும். பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகள் ஒவ்வொன்றாக நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும்.

**மிதுன - செவ்வாய் சஞ்சாரம்**

மார்ச் 30 ஆம் திகதி, மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிப்பதால் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்லுங்கள். செவ்வாயின் பார்வை சனி மீது பதிவதால் சகோதர வர்க்கத்தினர்களுடன் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பாகப்பிரிவினைகளில் தாமதம் ஏற்படும். இருப்பினும் குரு பார்வை உங்கள் ராசியில் பதிவதால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடி விடலாம்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் குடும்ப முன்னேற்றம் கூடும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். கணவன் - மனைவிக்குள் அன்பும் பாசமும் அதிகரிக்கும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு கிடைக்கும். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கும். செவ்வாய் பெயர்ச்சிக்குப் பிறகு உடல்நலத்தில் கவனம் தேவை. பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திரமஹால் பெருமையுடன் வழங்கும்

மாபெரும் நடனப் போட்டி

நட்சத்திர நர்த்தன சங்கமம்

காலம்
30
April
2023
நேரம்
மாலை
2:00 மணி

இடம்: நட்சத்திரமஹால் திருமண மண்டபம்
A9 வீதி கொடிகாமம், யாழ்ப்பாணம்

கீழ்ப்பிரிவு - 14 வயதுக்குள் - கிராமிய நடனம் (4 - 6 நிமிடம்)

மத்திய பிரிவு - 14 - 18 வயது - Fushion Dance (4 - 8 நிமிடம்)

மேற்பிரிவு - 18 வயதுக்கு மேல் - பரதநாட்டியம் (வர்ணம்) (15 - 20 நிமிடம்)

ஒவ்வொரு குழுவிற்கும் பரிசுத்தொகை

1ம் பரிசு 20 0000 ரூபா
2ம் பரிசு 10 0000 ரூபா
3ம் பரிசு 50 000 ரூபா

- ஒவ்வொரு குழுவிலும் 05 - 10 மாணவர்கள் பங்குபற்ற முடியும், இருபாலாரும் ஒரு குழுவாக பங்கு பற்றலாம்.
- இலங்கையின் எப்பிரதேசத்தில் இருந்தும் பங்குபற்ற முடியும்.
- 30.04.2023 திகதி வயதெல்லைகள் கணிக்கப்படும். (நிகழ்வு நடைபெறும் அன்று பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பரிசீலிக்கப்படும்.)
- பெறுமதியான பரிசில்கள் ஒவ்வொரு குழுவிற்கும் வழங்கப்படும், பங்குபற்றிய குழுக்கள் அனைத்திற்கும் பணப்பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.
- பக்கவாத்தியங்கள் நேரடியாகவோ, ஒலி நாடா மூலமாகவோ செய்ய முடியும். அதற்குரிய செலவுகள் வழங்கப்பட மாட்டாது. போட்டியாளர்களே ஒழுங்கு படுத்துதல் வேண்டும்.
- 1000/= கட்டுப்பணம் செலுத்தி பதிவு செய்ய வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி 01.04.2023

தொடர்புகட்கு : திரு. பார்த்தீபன்: (07 74 04 65 40), திரு. ரங்கன்: (07 70 37 27 57), திரு. பாலசண்முகநாதன்: (07 77 78 07 30), செல்வி அனுசியா: (07 65 47 91 26), திரு. பரமானந்தம்: (0033 6 99 23 59 50)

(சி-5984)

# இலங்கைக்கு இத்தாலி துணைநிற்கும்

(கொழும்பு)

கடினமான காலங்களில் இலங்கைக்கு எப்போதும் துணை நிற்கும் என இத்தாலி உறுதியளித்துள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுடனான சந்திப்பின் போதே இத்தாலியின் பிரதி நிதியமைச்சர் பேராசிரியர் மொரிசியோலியோ இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார். (நி)

# கப்ராலுக்கான பயணத்தடை நீடிப்பு

(கொழும்பு)

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலுக்கு விதிக்கப்பட்ட பயணத் தடை நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் தென் மாகாண ஆளுநர் ரஜித் கீர்த்தி தென்னகோனினால் சமர்ப்பிக்கப்பட்ட மனு நேற்று வியாழக்கிழமை கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி வரை குறித்த தடை நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக கடமையாற்றிய போது, அஜித் நிவார்ட் கப்ரால் பொது நிதியை துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சுமத்தி இந்தத் தனிப்பட்ட மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# இராசிபலன்

17.02.2023
மாசி 05, வெள்ளிக்கிழமை
துவாதசி முன்னிரவு 8.47 மணிவரை
பூராடம் பிற்பகல் 5.46 மணிவரை

சுபநேரம் -6.33-8.03 மணிவரை
இராகுகாலம் 11.03-12.33 மணிவரை

சந்திராஷ்டமம் - மிருகசீரிடம், திருவாதிரை

வளவன்

**மேஷம்**
பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், தடைகள் அகன்று தன வரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கடகம்**
வழிபாடு சிறப்பினைத் தரும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்**
ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்,வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்**
பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடும்.

**ரிஷபம்**
மனக்குழப்பம் தீர வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**சிம்மம்**
பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உள்ளம் மகிழும் வகையில் சில சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறலாம்,சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்**
குடும்ப மகிழ்ச்சி கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**கும்பம்**
இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்,காரிய அனுகூலமுண்டு, தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பணவரவால் சந்தோசமடைவீர்கள்.

**மிதுனம்**
நட்பு வட்டம் விரிவடையும் நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்,காரிய அனுகூலமுண்டு.

**கன்னி**
பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோர் மீதான பாசம் கூடும்.

**தனுசு**
மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, இரவு பகல் பாராது பாடுபடுவீர்கள், ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மீனம்**
அரைகுறையாக இருந்த பணியை மீதியும் தொடர்வீர்கள்,விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தெய்வீகச் சிந்தை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

அன்பு ஒருநாளும் சந்தைக்கு வருவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார மத்திய நிலையம் தமிழர்களிடமே வழங்க வேண்டும்

## விக்னேஸ்வரன் எம்.பி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தை தமிழ் மக்களிடமே வழங்க வேண்டுமென தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பின ருமான சி.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இந்திய அரசின் நிதி உதவி யில் யாழில் அமைக்கப்பட்ட கலாசார நிலையம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவி க்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரி வித்துள்ளதாவது.

யாழ்ப்பாண கலாசார மண்ட பம் தமிழ் மக்களுக்கென்று இந் தியாவால் வழங்கப்பட்டது. ஆகவே அதனை பராமரிப்பது, கலாசார நிகழ்வுகளை நடத்து வது என அனைத்தும் தமிழ் மக்களாகத்தான் இருக்க வேண் டும்.

அவர்கள் கையிலே முழுப் பொறுப்பும் இருக்க வேண்டும்.

இதை விடுத்து மத்திய அரசா ங்கம் அதற்கு ஒரு குழு அமை த்து தானே செயற்படுத்துவது அல்லது வைத்திருப்பது முறை யானது அல்ல. அதனை ஏற்றுக் கொள்ளவும் முடியாது.

இந்த மத்திய நிலையம் அமை க்கும் பணிகள் தொடங்கும் பொழுது நான் முதலமைச்சராக இருந்தேன். அப்பொழுது இது மாகாண சபைக்கு வருமென்று தான் எதிர்பார்த்திருந்தோம். இப்பொழுது மாகாண சபை வலு வில் இல்லாத போது அது மாந கர சபைக்காவது கொடுக்க வேண்டும்.


அதேவேளை ஐந்து வருட காலத்திற்கு அதற்குரிய செலவுக ளை தருவதாக இந்தியா கூறி யிருப்பதால் எங்களுடைய மாந கர சபையே இதை கொண்டு நடத்தலாம் என்று நம்புகிறேன்.

இது எந்தவிதத்திலும் தமிழ் மக்களின் கைகளில் இரு ந்து மத்திய அரசாங்கத்திற்கு போவதை நான் விரும்பவில்லை.

அவ்வாறான செயற்பாடுகளை கண்டிக்கிறேன். இதற்குரிய நடவடிக்கைகளை ஜனாதிபதி எடுப்பார் என்று நம்புகிறேன் எனத் தெரிவித்தார். (4-6-33)

## தாவடியில் தீ விபத்து

# வாகன வேலைத்தளம் முற்றாக எரிந்து நாசம்





(அராலி)

தாவடி வன்னிய சிங்கம் வீதியில் உள்ள வாகன வேலை த்தளம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக வாகன பெயிண்டிங் மற்றும் வாகன வேலைத்தளம் எரிந்து நாசமாகி யுள்ளதோடு வேலைத் தளத்து க்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு பட்டா ரக வாகனமும் முழுமை யாக எரிந்துள்ளது.

வேலைத்தளத்தில் ஏற் பட்ட மின் ஒழுக்கு காரணமாக தீ விபத்து ஏற்பட்டு இருக்க லாம் என சந்தேகிக்கப்படுகின் றது.

யாழ். மாநகர சபையின் தீயணைப்பு வாகனம் வர வழைக்கப்பட்டு தீ கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கை முன்னெடுக்க ப்பட்டது. (4-6-104)

# நிலுவைகள் செலுத்தாது விடின் வர்த்தகக் கண்காட்சி ரத்து

## யாழ்.மாநகர சபை தீர்மானம்

(அராலி)

எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள சர்வ தேச வர்த்தகக் கண்காட்சியின் ஏற்பாட்டாளர்கள் யாழ். மாநகர சபைக்கு வழங்க வேண்டி யுள்ள நிலுவையைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் 2023 ஆம் ஆண்டுக்கான சர்வதேச வர்த் தகக் கண்காட்சியை நடத்த அனுமதி வழங்குவதில்லை என்று யாழ். மாநகர சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் மாதாந்த கூட்டம் நேற்று முதல் வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகளுக்கான வரி மற் றும் இதர கட்டணமாக சுமார் 39 இலட்சம் ரூபாய் செலுத்தப்படாமல் நிலுவையிலுள்ள நிலையில், 2023 ஆம் ஆண்டு கண்காட் சியை நடத்துவதற்கான அனு மதிக்கு விண்ணப்பிக்கப்பட் டுள்ளது.

இந்நிலையில் நிலுவை யைச் செலுத்தாமல் அனுமதி வழங்குவதில்லை என்றும் மாநகர சபையினால் வழங் கப்படும் சுகாதார சேவைகள் உட்பட நலச்சேவைகள் எதனை யும் வழங்குவதில்லை எனவும் சபையில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. (4-6-104)



மகா சிவராத்திரியை முன்னிட்டு அகில இலங்கை சைவ மகா சபையினரால் இரத்ததான முகாமொன்று கீரிமலை குழந்தை வேல் சுவாமிகள் அறப்பணி மைய அரங்கில் நேற்றுக்காலை முன்னெடுக்கப்பட்டது. (படம்-கஜிந்தன்)




தெல்லிப்பழை மருத்துவமனை புற்றுநோய்ச் சிகிச்சை பிரிவுக்கு சத்துமா வகைகள் சிவபூமி அறக்கட்டளையினால் கடந்த 14 திகதி வழங்கப்பட்டது.

# ஸ்ரீ கல்கி பகவானின் பாதுகை அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ கல்கிபகவானின்பாதுகை அபிஷேகமும் ஸ்ரீ கல்கி வரய க்ஞமும் இந்தியாவில் உள்ள நேமம் திருத்தலத்தில் இருந்து நேரலை நிகழ்வாக நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணி தொடக் கம் 5 மணிவரை நல்லூர் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் ஒளி பரப்புச் செய்யப்படவுள்ளதுடன் பகவானின் திருப்பாதங்களு க்கு அபி ஷேகம் செய்யும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது என யாழ்ப்பாணம் அம்மா பகவான் அமைப்பினர் அறிவித் துள்ளனர். (4)

# இந்திய மீனவர்களால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடு வழங்குங்கள்

## இந்திய துணை தூதுவரிடம் கோரிக்கை

(அராலி)

இந்திய இழுவைப்படகுகளால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் - காரைநகர் பகுதி மீனவர்களுக்கு உரிய இழப்பீட்டினை வழங்கு மாறு கோரி, காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் பாலச்சந்தி ரனால் இந்திய துணைத் தூது வர் ராகேஷ் நடராஜனுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

அந்தக்கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது காரைநகர் கடற் பிரதேசத்தில் கடந்த வாரம் 3 மீனவர்களுடைய 11 இலட்சம் பெறுமதியான வலைகள் அறு க்கப்பட்டு முழுமையாக சேதப்படு த்தப்பட்டிருக்கிறது.

இந்த சம்பவத்திற்கு இந்திய மீனவர்கள் பொறுப்பாளிகள் என பாதிக்கப்பட்ட மீனவர்களும் கடற்றொழிலாளர் சங்க தலை வரும் தெரிவிக்கின்றார்கள்.

இந்திய தமிழக உறவுகளுக் கும் எமக்கும் உள்ள புரிந்துணர் விலும் உறவிலும் இது விரிசலை ஏற்படுத்துவதால் இது சம்பந்த மாக உரியவர்களிடம் தெரிவி த்து தீர்வை காணுமாறும் பாதிக் கப்பட்ட மீனவர்களுக்கு நஷ்ட ஈட்டைப் பெற்றுத் தருமாறும் கேட்டுக்கொள்கின்றேன் என குறிப்பிடப்பட்டுள்ளது. (4-6-104)

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/இளையதம்பி இந்து வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு - 2023 இன்று வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் திருமதி.சி. நந்தகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்து

## நான்கு பயணிகள் படுகாயம்

(ஹற்றன்)

கொழும்பில் இருந்து ஹற்றன் நோக்கி வந்த தனியார் பேருந்தும் ஹற்றன் நகரில் இருந்து கண்டி நோக்கி சென்ற அரச பேருந்தும் தியகல கினிகத்தேன பிரதான வீதியில் நேருக்கு நேர் மோதியதில் அதில் பயணம் செய்த நால்வர் படுகாயம் அடைந்துள்ளனர்.



காயமடைந்த பயணிகள் கினிக்கத்தேன மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் நடந்த இடத்திற்கு கினிக்கத்தேன பொலிஸார் விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

---

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை-பளை
## 03.03.2023 தொடக்கம் 31.12.2023 வரையான காலப்பகுதிக்கு இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடை மற்றும் முள்ளிப்பற்று பழைய உப அலுவலகத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்-2023

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 17.02.2023 தொடக்கம் 02.03.2023 பிற்பகல் 2.00 மணி வரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 02.03.2023 பிற்பகல் 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 02.03.2023 பிற்பகல் 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

**இறைச்சிக் கடைகளுக்கான கேள்வி அட்டவணை**

| இல. | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| புலோப்பளை உப அலுவலகம் | | | | |
| 02 | கோழி இறைச்சிக்கடை | 449859.00 | 10,000.00 | 2,000.00 |
| 04 | கருவாட்டுக்கடை | 9578.00 | 5,000.00 | 2,000.00 |
| முள்ளிப்பற்று உப அலுவலகம் | | | | |
| 05 | கோழி இறைச்சிக்கடை | 51638.00 | 5,000.00 | 2,000.00 |
| 06 | பழைய முள்ளிப்பற்று உப அலுவலகம் | 67463.00 | 5,000.00 | 2,000.00 |

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
2. கேள்விப்படிவம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்க வேண்டும்.
3. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 02.03.2023 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
4. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
5. கேள்விச் சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையில் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ள வேண்டும். மிகுதி தொகையினை 06 பகுதியாக பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டமாக அறவிடப்படும்.
6. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத வாடகையினை கேள்வித்தொகையுடன் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் பாதுகாப்பு வைப்புப்பணமாக 03 மாத வாடகையினை முற்பணமாக செலுத்துதல் வேண்டும்.
7. சித்திகர குத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
8. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
9. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர்/செயலாளருக்கு உண்டு.
10. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.


**சுப்பிரமணியம் சுரேன்**
**தவிசாளர்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.** 17.02.2023

(C-5987)

---

# தபால் மூல வாக்களிப்பு தொடர்பில் அடுத்த வாரம் முக்கிய தீர்மானம்

(கொழும்பு)



தபால் மூல வாக்களிப்பிற்கு தேவையான வாக்குச் சீட்டுகள் இந்த வார இறுதிக்குள் கிடைக்கப்பெறாவிட்டால், தபால் மூல வாக்களிப்பு தொடர்பில் அடுத்த வாரம் தீர்மானம் எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

தபால் மூல வாக்களிக்கும் திகதியை மாற்றுவதற்கு எவ்வித தீர்மானமும் இதுவரை எடுக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், வாக்குச் சீட்டுகள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் தபால் மூலமாக வாக்களிக்கும் திகதி தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் அடுத்த சில தினங்களில் கலந்துரையாடவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். (நி)

# 13 மில்லியன் பெறுமதியான போதைப்பொருட்கள் மீட்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து இலங்கை க்கு கொண்டுவரப்பட்ட 13 மில்லியன் ரூபாய் பெறுமதியான போதைப்பொரு ட்களை இலங்கை சுங்கப் பிரிவினர் மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் கைப்பற்றியுள்ளனர்.

ஜேர்மனி, இங்கிலாந்து, கனடா மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளில் இருந்து வந்த பொதிகளில் இந்த போதைப்பொரு ட்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

கைப்பற்றப்பட்ட பொருட்களில் 750 கிராம் குஷ் மற்றும் 207 போதை மாத்திரைகள் உள்ளடங்குவதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (நி)

# பாடப்புத்தகங்களை விரைவில் விநியோகிக்க தீர்மானம்

## கல்வி அமைச்சர் சுசில்

(கொழும்பு)

2023 ஆம் கல்வியாண்டுக்குரிய பாடசலை பாடபுத்தகங்களை எதிர்வரும் 27 ஆம் திகதிக்குள் விநியோகிக்க எதிர்பார்த்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

மஹரகம பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்றி உரையாற்றிய போதே கல்வி அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, ஆரம்ப வகுப்பு மற்றும் 6 முதல் 11 வரையிலான வகுப்புகளுக்கு பாடப்புத்தகங்களை பகிர்ந்தளிக்க முன்னுரிமை அளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வருடாந்தம் பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு 4.5 பில்லியன் ரூபாய் செலவிடப்படுவதாகவும் இந்த வருடம் பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு 16 பில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார். (நி)

# புகைப்பட பிரதியின் விலையும் அதிகரிப்பு

(கொழும்பு)

புகைப்பட பிரதி ஒன்றின் விலையை 5 ரூபாவினால் அதிகரிக்க அகில இலங்கை தொடர்பாடல் உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

மின்சாரம், காகிதம் மற்றும் புதிய இயந்திரங்களின் விலை அதிகரிப்பு காரணமாக புகைப்பட நகல் ஒன்றின் விலையை அதிகரிக்க வேண்டியுள்ளதாக சங்கத்தின் தலைவர் இந்திரஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, ஏ4 அளவு நகல் பிரதி 15 ரூபாவிலிருந்து 20 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அடையாள அட்டையின் நகல் பிரதி 10 ரூபாவிலிருந்து 15 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அச்சுப் பிர்திகள் வழங்குவதற்கான கட்டணமும் கறுப்பு வெள்ளைப் பிரதி 5 ரூபாவாலும் வண்ணப் பிரதியொன்றுக்கு 10 ரூபாவாலும் அதிகரிக்கப்படும் என அகில இலங்கை தொடர்பாடல் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி)

# பந்துல பஸ்நாயக்க காலமானார்

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் பந்துல பஸ்நாயக்க கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலை காலமானார்.

பந்துல பஸ்நாயக்க சுகயீனம் காரணமாக மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே காலமானார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 105





போன்ற உத்தமப் புதல்வனைப் பெற்ற உத்தமியைத் தரிசிக்க விரும்புகிறேன்."

"என்னைப் பெற்ற அன்னை உத்தமிதான் ஆனால் துர்ப்பாக்கியசாலி"

"அடடா! ஏன் அவ்வாறு சொல்கிறாய்"

"ஒருவேளை உன் தந்தை"

"என் தந்தை இறந்து தான் போனார். ஆனால் அது மட்டுமில்லை என் தாய் பிறவியிலேயே துர்பாக்கியசாலி. பார்த்தால் தெரிந்து கொள்வீர்கள் வாருங்கள் போகலாம்."

அரை நாழிகை நேரம் நடந்து அவர்கள் நகர்ப்புறத்துக்கு அப்பாலிருந்த பூந்தோட்டத்துக்கு வந்து சேர்ந்தார்கள். இரவில் மலரும் பூக்களின் இனிய மணம் வந்தியத்தேவனுக்கு அபூர்வ சுகமயக்கத்தை உண்டாக்கியது. நகரத்தின் வீதிகளில் எழுந்த கோலாகல இரைச்சலும் சந்தடியும் அங்கே அவ்வளவாகக் கேட்கவில்லை. பூந்தோட்டத்தின் மத்தியில் ஓட்டு வீடு ஒன்று இருந்தது. பக்கத்தில் இரு குடிசைகள் இருந்தன. தோட்ட வேலையில் உதவி செய்த இரு குடும்பத்தார் அக்குடிசைகளில் இருந்தார்கள். அவர்களில் ஒருவனை அமுதன் அழைத்து, வந்தியத்தேவனுடைய குதிரைக்குத் தீனி வைத்து மரத்தடியில் கட்டி வைக்கும்படி கூறினான்.

பிறகு, வீட்டுக்குள் அழைத்துச் சென்றான். அமுதனுடைய தாயாரைப் பார்த்ததும் வந்தியத்தேவனுக்கு அவளுடைய துர்ப்பாக்கியம் இத்தகையது என்று தெரிந்து விட்டது. அந்த மூதாட்டி பேசும் சக்தியற்ற ஊமை, காதும் கேளாது என்று தெரிந்தது.

ஆனால் அந்த மாதரசியின் முகத்தில் கருணையும் அன்பும் நிறைந்து ததும்பியதை வந்தியத்தேவன் கண்டான். கூரிய அறிவின் ஒளியும் அம்முகத்திலிருந்து வீசியது. பொதுவாக, ஏதாவது ஒரு அங்கத்தில் ஊனமுற்றவர்கள் மற்றபடி சிறந்த அறிவுக் கூர்மையுள்ளவர்களாக விளங்குவது சிருஷ்டி விசித்திரங்களில் ஒன்று அல்லவா?

அமுதன் சில சமிக்ஞைகள் செய்ததும் அந்த மூதாட்டி வந்திருப்பவன் அயல் தேசத்திலிருந்து வந்த விருந்தாளி என்று தெரிந்து கொண்டாள். முகபாவத்தினாலேயே தன்னுடைய பரிவையும் வரவேற்பையும் தெரிவித்தாள். சற்று நேரத்துக்கெல்லாம் இலை போட்டு அந்த அம்மாள் உணவு பரிமாறினாள்.

முதலில் இடியப்பமும் இனிப்பான தேங்காய்ப் பாலும் வந்தன. அந்த மாதிரி இனிய பலகாரத்தை வந்தியத்தேவன் தன் வாழ்நாளில் அருந்தியதில்லை. பத்துப் பன்னிரண்டு இடியப்பமும் அரைப்படி தேங்காய்ப் பாலும் சாப்பிட்டான், பிறகு புளிக்கறியும் சோளமாப் பணியாரமும் வந்தன் அவற்றையும் ஒருகை பார்த்தான். அப்படியும் அவன் பசி அடங்கவில்லை கடைசியாக காற்படி அரிசிச் சோறும் அரைப்படி தயிரும் நுங்கினான். பிறகுதான் அவன் இலையிலிருந்து எழுந்தான்.

சாப்பிடும்போதே சில விடயங்களை அமுதனிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

"என்னிடம் மந்திர வித்தை இருக்கிறது அதனால் தெரிந்து கொண்டேன் உன் வீடு எங்கே இருக்கிறது?"

"நகர எல்லையைத் தாண்டிக் கூப்பிடு தூரத்தில் எங்கள் பூந்தோட்டம் இருக்கிறது. தோட்டத்துக்குள்ளே எங்கள் வீடும் இருக்கிறது" என்றான் அமுதன்.

"ஆகா! அப்படியானால் உன் வீட்டுக்கு நான் வந்தே தீருவேன். இந்தப் பட்டணத்துச் சந்தடியில் என்னால் இன்றிரவைக் கழிக்க முடியாது. மேலும் உன்னைப்

(தொடரும்...)

## சிறுவர் அரங்கம்

## பரமார்த்த குரு கதைகள்

### உலக்கை பூஜை

செட்டியார் ஒருவர் சிவபெருமான் மீது அதீத பக்தி கொண்டவராக வாழ்ந்து வந்தார். அவர் பலசரக்குக் கடை வைத்து, நியாயமாக வியாபாரம் செய்து பணம் சம்பாதித்து வந்தார். சம்பாதித்த பணத்தில் பெரும் பகுதியைச் சிவபக்தர்களுக்குத் தினமும் அன்னதானம் செய்வதில் செலவிட்டு வந்தார்.

அவரே நேரில் கண்டு சிவபக்தர்களை வருந்தி வருந்தி வீட்டுக்கு அழைத்து வந்து, உபசாரம் செய்து உணவளித்து மகிழ்வார்.

அவருக்குக் குழந்தை ஏதும் இல்லை. வாய்த்திருந்த மனைவியோ நல்லவள்தான். இருந்தாலும் தினந்தினமும் வடித்து வடித்துக் கொட்டி, அடியார்களுக்கு அமுது படைத்தும் அவன் அடிவயிறு கனக்க ஒரு குழந்தையும் உருவாகவில்லை. ஆகையால், அவளுக்கு அலுத்துப் போய்விட்டது. தர்மம் செய்வதில் சலிப்பு ஏற்பட்டு விட்டது. என்றாலும் அதைக் கணவனுக்குக் காட்டிக் கொள்வதில்லை. கணவனுக்குத் தெரிந்தால் அவர் வருத்தப்படுவார். கோபிப்பார் என்று பயந்தாள்.

பண்டாரங்களுக்கு உணவு சமைத்துப் பரிமாறுகிற தொந்தரவிலிருந்து மீள வேண்டும் என்று பல நாட்களாக அவள் யோசித்து வந்தாள். ஒருநாள் அவளுக்கு ஓர் உபாயம் தோன்றியது. அதன்படி, நடைமுறைப்படுத்த நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்போது, சிவபக்தரான ஒரு பண்டாரம் அவள் வீட்டுக்கு வந்தான்.

"தாயே! செட்டியார் என்னை இங்கே அனுப்பி வைத்தார். நான் கூட ஏதும் கேட்கவில்லை. அவரே கூப்பிட்டுச் சொல்லியனுப்பினார். நான் சீக்கிரம் போகவேண்டும். உங்கள் திருக்கரத்தால் அன்னம் அளியுங்கள்" என்று கேட்டான் அந்தப் பண்டாரம்."



"அப்படியா? செட்டியார் தான் அனுப்பினாரா?" என்று ஏதோ சிந்தித்துக் கொண்டே கேட்டாள் அவள்.

"ஆமாம் தாயே! இந்தச் சிவபக்தன் பொய் சொல்ல மாட்டான்! செட்டியார், கடையிலே சுறுசுறுப்பாக வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார். அவருக்கு வீட்டுக்கு வர நேரமில்லை. அதனால்தான் எனக்கு விலாசம் சொல்லியனுப்பினார். போடு தாயே! நான் போக வேண்டும்" என்று அவசரப்படுத்தினான். அவள் "போடுகிறேன்... போடுகிறேன்...! நன்றாகப் போடுகிறேன். சற்றுப் பொறுத்துக் கொள்ளுங்கள். இதோ... இப்போதே எல்லாம் தயார் செய்துவிடுகிறேன்... இதோ வருகிறேன்" என்று உள்ளே சென்று ஒரு பாயைக் கொண்டு வந்து திண்ணையில் விரித்தாள்.

"இங்கே திண்ணையில் அமர்ந்து சற்றுச் சிரம பரிகாரம் செய்து கொள்ளுங்கள். சில நிமிடங்களில் அன்னம் படைத்து விடுகிறேன்" என்று உள்ளே போனாள் செட்டியார் மனைவி. பண்டாரம் நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு திண்ணையில் கம்பீரமாக அமர்ந்து விட்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ஒருவர் தன் ஒளியில் தான் நிற்கும் பொழுது உண்டாகும் நிழலே அவன் வாழ்வில் அதிக இருள் உடையதாகும். – ஆவ்பரி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாட்டு மக்கள் அனைவரையும் ஒரே நேரத்தில் தாக்கிய மின்சாரம்!

நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் ஒரே நேரத்தில் மின்சாரம் தாக்க முடியுமா? என்று கேட்டால் அது சாத்தியமில்லை என்பதே பதிலாகும்.

எனினும் இலங்கையில் அனைத்து மக்களையும் ஒரே நேரத்தில் மின்சாரம் தாக்கியுள்ளது.

ஆம், மின்கட்டணத்தை 66 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கிய கணத்தில் நாட்டின் ஒட்டுமொத்த மக்கள் மீதும் மின்கட்டண அதிகரிப்பு மின்சாரம்போல் தாக்கியுள்ளது.

உண்மை. ஒரு வீதம், இரண்டு வீதம் அல்ல. 66 வீதம் கட்டண உயர்வு எனும்போது, அதன் விளைவு மிகப்பாரதூரமானதாக இருக்கும் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

அதிலும் ஏழை மக்கள் மற்றும் நடுத்தரக் கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோர் குறித்த மின்கட்டண அதிகரிப்புக்கு ஈடுகொடுக்க முடியாமல், தத்தளிப்பர்.

இதன்விளைவாக நடுத்தரக் கைத்தொழில் முயற்சிகள் கைவிடப்படுகின்ற பரிதாப நிலை ஏற்படவே செய்யும்.

அதாவது மின்சார சபைக்கு ஏற்படுகின்ற நட்டத்தை ஈடுசெய்வதற்காக மின்கட்டணத்தை 66 சதவீதத்தால் உயர்த்திவிட, நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழப்போகிறது என்பதை இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் உணரவில்லை என்பதுதான் மிகப்பெரும் அபத்தம்.

தவிர, ஒருபுறத்தில் நடுத்தரக் கைத்தொழில் முயற்சிகள் மூடுவிழாக் காண, மறுபுறத்தில் மின்சாரத்துடன் தொடர்புபட்ட அத்தனை பொருட்களினதும் விலைகள் கண்டபாட்டில் எகிறும் என்பதும் நிறுதிட்டமான உண்மை.

ஆக, மின்சாரத்தின் கட்டண அதிகரிப்பு நாட்டைக் கந்தறு நிலைக்குக் கொண்டு வந்துவிடும் என்பதற்கப்பால், இனி நாடு முழுமையாக இருளில் மூழ்கும் என்பதும் நிதர்சனமான உண்மை.

ஆம், மின்கட்டண அதிகரிப்புக் காரணமாக, வீடுகளில் மின்குமிழ்கள் ஒளிர்வது நிறுத்தப்படும்.

இதற்கு மேலாக, ஆலயங்கள் உள்ளிட்ட மதத் தலங்களுக்கு ஏலவே குறைந்த மின்கட்டணம் அறவிடப்பட்டதன் காரணமாக, பொதுமக்களின் நலன்கருதி ஆலய மின்குமிழ்கள் ஆலய வீதிகளில் வெளிச்சம் பாய்ச்சின.

ஆனால் இனி ஆலய வீதிகள் இருளில் மூழ்கப் போகின்றன.

ஆக, ஒட்டுமொத்தத்தில் 66 சதவீத மின்கட்டண அதிகரிப்பு, பொருளாதார ரீதியில் நாட்டை இருண்ட கண்டத்துக்குக் கொண்டு செல்லவுள்ளதுடன் இராப்பொழுதில் நாடு இருள்மயமாகப் போகிறது என்பதுதான் உண்மை.

என்ன செய்வது நாட்டில் சூறையாடப்பட்ட சொத்துக்களை, வளங்களை மீட்டெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல், பொருட்கள் சேவைகளின் விலைகளைக் கண்டபாட்டில் உயர்த்தி நாட்டை மீட்பது என்றால், அது ஒரு போதும் சாத்தியப்படாது என்பதே உண்மை.

# நாடு அராஜக பாதையில் செல்வதை தடுப்பது எதிர்க்கட்சி உள்ளிட்ட அரசியல் சக்திகளின் பொறுப்பு

## முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய

நெருக்கடிகள் மத்தியில் நாடு அராஜக பாதையில் செல்வதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பது எதிர்க்கட்சி உள்ளிட்ட அரசியல் சக்திகளின் பொறுப்பாகும் என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் அவர் விடுத்திருக்கும் அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போது உருவாகியிருக்கும் சிக்கல்களை சரியாக மதிப்பிட்டு, உருவாகிக்கொண்டிருக்கும் எதிர்மறை சூழ்நிலைகளை மேலும் வளர விடாமல் இருப்பது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும் என அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாட்டில் உருவாகிக் கொண்டிருக்கும் பாரதூரமான நெருக்கடிகளை சரியாக மதிப்பீடு செய்து, பொது இணக்கப்பாட்டின் ஊடாக, மக்களின் இறையாண்மை அதிகாரத்தை சரியாக பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மக்கள் ஆணையின் ஊடாக சிறந்த ஆட்சிக்கு வழிவகுக்கும் தேர்தலுக்கு தாமதமின்றி பிரவேசிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (ம-7)

# பிரதமர் பதவியில் இருந்து மகிந்தவை நீக்கியது தவறு

## பஸில் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

மகிந்தவைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கியமை பிழை எனவும், அவர்தான் இப்போதும் பிரதமராக இருந்திருக்க வேண்டும் எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்கியது மொட்டுக் கட்சியினர் அல்லர் எனவும், போராட்டக் காரர்களே அவரைப் பிரதமராக்கினார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள்தான் மகிந்த பிரதமர் பதவியில் இருந்து விலக வேண்டும் எனவும், எதிர்க்கட்சியில் இருந்து ஒருவர் பிரதமராக நியமிக்கப்பட வேண்டும் எனவும் கோரினார்கள் எனவும் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மகிந்தவே பிரதமராக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தாங்கள் இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்தவைத் தவிர வேறு எவரையும் பிரதமராக நியமிப்பதற்கு விருப்பம் இல்லை என உறுதியாகக் கூறியதாகவும், எனினும், கோட்டாபய அவரது விருப்பத்தின்படி ரணிலைப் பிரதமராக நியமித்தார் எனவும் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மகிந்தவுக்கு மக்கள் ஆணை இல்லை எனவும், அவரைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்குங்கள் என கோட்டாவுக்குக் கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதனால்தான் அவர் ரணிலைப் பிரதமராக் நியமித்தார் எனவும் பஸில் ராஜபக்ஷ சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர் பிரதமராக நியமிக்கப்பட்டமைக்கும் பின்னர் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டமைக்கும் தாங்களுக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பின்னர் பாராளுமன்றின் ஊடாக ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டிய தேவை வந்தபோது அப்போதைய வேட்பாளர்களை ஆராய்ந்து பார்த்து ரணிலை ஜனாதிபதியாக்குவதற்கு தாங்கள் முடிவெடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், மகிந்தவைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கியமை பிழை எனவும், அவர்தான் இப்போதும் பிரதமராக இருந்திருக்க வேண்டும் எனவும் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-7)

## புற்றுநோய்க்கு மருந்து கொடுப்பதற்கு இலஞ்சம் வாங்கிய மருந்தாளர் கைதாகி விளக்க மறியலில்

புற்றுநோயாளிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் Carbofatine என்ற மருந்தை வழங்குவதற்கு இருபதாயிரம் ரூபா இலஞ்சம் பெற்றதாக கூறப்படும் மஹரகம வைத்தியசாலையின் மருந்தாளரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

மஹரகம, அம்பகஹபுரவை சேர்ந்த புற்றுநோய் வைத்தியசாலையின் மருந்தாளரான மிஸ்ஸக உதயங்க கந்தமுல்ல என்பவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வாய்ப் புற்றுநோய்க்கு வழங்கப்படும் Carbofatine என்ற மருந்து புற்றுநோய் வைத்தியசாலையில் இல்லை எனவும், தன்னிடம் 20,000 செலுத்தி பெற்றுக்கொள்ள முடியுமென்றும் நோயாளிகளிடம் கூறியுள்ளார்.

இதன்படி, மஹரகம பிரதேசத்தில் சந்தேக நபரிடம் இருந்து குறித்த முறைப்பாட்டாளர் மருந்தை பெற்றுக்கொண்ட போது இலஞ்ச ஆணைக் குழுவின் முகவர் முன்னிலையில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டு சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு நீதிமன்றில் அறிவித்தது. (ம-7)

### மாங்குளம் பகுதியில்

## இறந்த நிலையில் யானை ஒன்று மீட்பு

முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளத்திற்கும் ஒட்டுசுட்டானுக்கும் இடைப்பட்ட மேளீவனம் பகுதியில் இறந்த நிலையில் யானை ஒன்று நேற்று அடையாளம் காணப்பட்டிருந்தது.

மீன்பிடி நடவடிக்கைகளுக்காக சென்ற மீனவர்களால் குறித்த, யானை அடையாளங்காணப்பட்ட [illegible] னருக்கும் தகவல் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை யானையின் ஒரு கால் காயமடைந்த நிலையில் காணப்பட்டதாக வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இறந்த யானையின் உடற்கூற்று பரிசோதனைகள் இன்றையதினம் மேற்கொள்ளப்படும் என வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவுக்கு பயணமானார் முன்னாள் ஜனாதிபதி கோட்டா

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது மனைவி அயோமா ராஜபக்ஷவும் நேற்று அதிகாலை சீனாவுக்கு பயணமாகியுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து சீனா செல்வதற்காக மலேசியாவின் கோலாலம்பூர் நோக்கி பயணித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 12.25 மணிக்கு மலேசியன் ஏர்லைன்ஸின் MH-178 விமானத்தில் புறப்பட்டுள்ளனர். ஆனால் அவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை விட்டு வெளியேற, விமான நிலையத்தின் விமான சரக்கு முனையத்தை பயன்படுத்தியுள்ளதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் ஜனாதிபதியொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள சிறப்பு விருந்தினர் அறை ஊடாகப் பணம் செலுத்தி அல்லது சாதாரண பயணிகள் முனையத்தின் ஊடாகவோ செல்வதற்கு வசதிகள் காணப்படும் நிலையில், முன்னாள் ஜனாதிபதியும் அவரது மனைவியும் சரக்கு முனையத்தை பயன்படுத்தி சென்றுள்ளதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

# தேர்தல் நடைபெறாவிட்டால் ஜனநாயக நெருக்கடி ஏற்படும்

## சமத்துவக் கட்சி

(கிளிநொச்சி)

நாடு அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ள நிலையில் உள்ளூராட்சி தேர்தலையும் நடத்தாதுவிடின் அது ஜனநாயக நெருக்கடியையும் ஏற்படுத்தும் என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திகுறிப்பில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களைத் திட்டமிட்ட காலத்தில் நடத்த வேண்டும். அதுவே மக்களின் ஜனநாயக உரிமைகளை மதித்துப் பாதுகாப்பதாக அமையும். அதுவே மக்களுடைய எதிர்பார்ப்புமாகும். தற்போது வெளிவரும் செய்திகள் தேர்தல் நடக்குமா இல்லையா என்ற கேள்வியையும் குழப்பத்தையும் மக்களிடையே உண்டாக்கியுள்ளன.

அரசியலமைப்பின் பிரகாரம், மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் உரிமையும் அதிகாரமும் மக்களுக்குண்டு. அதனை மறுக்கும் அல்லது தாமதப்படுத்தும் நடவடிக்கைகள் ஏற்கமுடியாதவையாகும். நாடு அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி போன்றவற்றால் பாதிக்கப்பட்டிருக்கும் சூழலில் தேர்தலை நடத்தாமல் தவிர்ப்பதன் மூலம் ஜனநாயக நெருக்கடியையும் உருவாக்கக் கூடாது.

ஜனநாயகச் சூழலை மேம்படுத்துவதன் மூலமே மக்களின் உரிமைகளைப் பேணுவதுடன் அனைத்து நெருக்கடிகளிலிருந்தும் மீள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6)

# தேர்தல் கண்காணிப்பு தொடர்பில் மகிந்த தேசப்பிரிய விளக்கம்



(குருமன்காடு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கை தொடர்பாக முன்னாள் தேர்தல் ஆணைக்குழுத் தலைவரும் தற்போதைய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவருமான மகிந்த தேசப்பிரியவால் இளைஞர், யுவதிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வானது வவுனியா, தவசிகுளம் பகுதியில் உள்ள அப்ரியல் அமைப்பின் மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இதன்போது, உள்ளூராட்சி தேர்தலின் நடைமுறைகள், வேட்பாளர்களின் செயற்பாடுகள், தேர்தல் முறைகேடுகளை அவதானிக்கும் வழிமுறைகள், சமூக ஊடகங்கள் ஊடான தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள், அரச சொத்துக்களை பயன்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டதுடன், இளைஞர், யுவதிகளின் கேள்விகளுக்கும் பதிலளிக்கப்பட்டது.(4-6-250)

# கிராஞ்சி வலைப்பாட்டில் நீர் விநியோகத் திட்டம்

(முறிகண்டி)



கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராஞ்சி வலைப்பாடு நீர் விநியோகத் திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

858 பயனாளிகள் பயனடையும் வகையில், 228.78 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட குறித்த நீர் விநியோகத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நீர் வழங்கல் மற்றும் மலையக உட்கட்டமைப்பு அமைச்சின் நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டமாக இது அமைந்துள்ளது. இப் பிரதேசத்திற்கு குடிநீர் வசதியினை வழங்குவதன் ஊடாக மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.

மேலும் இத். திட்டத்திற்கான நிதி அனுசரனையினை உலக வங்கி வழங்கியுள்ளது. (4-6-100-316)

# திருக்கேதீச்சரத்தில் நாளை மஹா சிவராத்திரி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருக்கேதீச்சரப் பெருமானின் மஹா சிவராத்திரி உற்சவம் நாளை சனிக்கிழமை காலை 5 மணிக்கு திருவனந்தல் பூசையுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

முதலாம் சாமப் பூசை இரவு 8 மணிக்கும் இரண்டாம் சாமப் பூசை இரவு 10.30 மணிக்கும் மூன்றாம் சாம இலிங்கோற்பவ பூசை நள்ளிரவு 12.15 மணிக்கும் நான்காம் சாமப் பூசை பின்னிரவு 3 மணிக்கும் நடைபெற்று தொடர்ந்து அதிகாலை 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெறும். அதனைத் தொடர்ந்து ஞாயிறு அதிகாலை சுவாமி பாலாவி தீர்த்தக்கரைக்கு எழுந்தருள்வார்.

சிவராத்திரியையொட்டி ஆலய வெளிவீதியில் அமைக்கப்படும் பிரமாண்ட அலங்கார மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. இதில் தமிழக மற்றும் இலங்கைக் கலைஞர்களின் ஆன்மிக உரைகள் மற்றும் பண்ணிசைக் கச்சேரி முதலியன இடம்பெறவுள்ளன. (4-6-33)

## அநாகரீகமான வார்த்தை பிரயோகம்

# யாழ்.மாநகரசபை உறுப்பினரின் ஒரு மாத சம்பளம் ‘கட்’

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையில் சிலர் "வைக்கோல் பட்டறை நாய்" போல செயற்படுகின்றார்கள் என சக உறுப்பினர் கூறியதை கண்டித்து அவரை சபையில் இருந்து வெளியேற்றி அவரது ஒரு மாத சம்பளத்தையும் இரத்து செய்துள்ளனர்.

யாழ்.மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று வியாழக்கிழமை முதல்வர் ஆர்னோல்ட் தலைமையில் நடைபெற்றது. அதன் போது, சபையில் உறுப்பினர் பாலசுப்பிரமணியம் பத்மமுரளி சபையில் சிலரின் செயற்பாடுகள் "வைக்கோல் பட்டறை நாய்" போன்றுள்ளது என கூறி இருந்தார். அதனால் சபையில் சில உறுப்பினர்கள் கடும் ஆவேசம் அடைந்து அமளியில் ஈடுபட்டனர்.

அதனை தொடர்ந்து "வைக்கோல் பட்டறை நாய்" என கூறிய உறுப்பினரை வெளியேற்றுமாறு முதல்வரை கோரினர். "நீங்கள் என்னை வெளியேற்ற தேவையில்லை. நானே வெளியேறுகிறேன்" என கூறி உறுப்பினர் சபையில் இருந்து வெளியேறி சென்றார். குறித்த உறுப்பினர் சபையில் கூறியது அநாகரீகமானது. அதனை சபை குறிப்பேட்டில் பதிய வேண்டும். சபை உறுப்பினர்களின் வேண்டுகோளினால், உறுப்பினர் சபையில் இருந்து வெளியேற்றப்பட்டார். சபையில் அநாகரீகமான வார்த்தை பிரயோகித்தமையால், அவரது ஒரு மாத சம்பளத்தை இரத்து செய்வதுடன், இந்த மாதத்தில் சபையின் எந்தவொரு செயற்பாடுகளுக்கும் அவர் அனுமதிக்கப்படமாட்டார் என சபையில் தீர்மானிக்கப்பட்டதாக முதல்வர் அறிவித்தார். (4-6-33)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 200 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 240 | 280 | 300 |
| தக்காளி | 260 | 200 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| கோவா | 70 | 70 | 100 | 100 |
| கரட் | 150 | 200 | 200 | 240 |
| பூசணி | 60 | 80 | 80 | 80 |
| புடோல் | 180 | 150 | 150 | 150 |
| வாழைக்காய் | 200 | 160 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 170 | 150 | 180 |
| பாகற்காய் | 300 | 350 | 350 | 500 |
| வெண்டக்காய் | 400 | 300 | 250 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 100 | 120 |
| பயற்றங்காய் | 650 | 500 | 450 | 600 |
| லீக்ஸ் | 260 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 160 | 150 | 150 | 200 |
| கறிமிளகாய் | 650 | 500 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 1800 | 1600 | 1200 | 1600 |
| போஞ்சி | 400 | 300 | 300 | 500 |
| கத்தரிதம்புள்ள | 250 | 150 | 100 | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 140 | 150 | 150 |
| தேசிக்காய் | 150 | 80 | 100 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 70 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 250 | 280 | 300 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 150 | 200 |
| முள்ளங்கி | 60 | 70 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 50 |
| ஈரப்பலா | 120 | 140 | 100 | 100 |

# இந்திய கடற்றொழிலாளர் மீது தாக்குதல்; விரிவான விசாரணை நடத்துக

## அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)



இந்தியக் கடற்றொழிலாளர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சில ஊடகங்களில் வெளியாகிய செய்தி தொடர்பாக அவதானம் செலுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விரிவான விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாரை கேட்டுள்ளதுடன் அவ்வாறான சம்பவம் நடைபெற்றிருக்குமானால் கண்டிக்கப்பட வேண்டியது அவசியம் எனவும் தெரிவித்தார்.

அமைச்சரின் ஊடக பிரிவினரால் அனுப்பப்பட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

எந்தவொரு சூழலிலும் யாரும் வன்முறைகளை கையில் எடுப்பதை அனுமதிக்க முடியாது. எமது தொப்புள்கொடி உறவுகள் பாதிக்கப்படாத வகையிலே இந்த விவகாரம் கையாளப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் பொலிஸார்...

ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடமை புரியும் 26 வயதான பிரதீப் என்ற பொலிஸ் உத்தியோகத்தரே கல்வயலில் உள்ள அவரது வீட்டில் தூக்கிட்டு உயிரை மாய்த்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவரது சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30,60)

## பொருட்களின்...

டுள்ளது.

ஒரு கிலோ பெரிய வெங்காயம் 10 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 149 ரூபாயாகும்.

இறக்குமதி செய்யப்படும் சம்பா அரிசி ஒரு கிலோ 7 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 198 ரூபாயாகும்.

ஒரு கிலோ சிவப்புப் பருப்பும் 7 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் புதிய விலை 358 ரூபாயாகும்.

ஒரு கிலோ உள்ளூர் சிவப்பு அரிசி 5 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் புதிய விலை 164 ரூபாயாகும்.

இறக்குமதி செய்யப்படும் வெள்ளை அரிசி ஒரு கிலோ 5 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 179 ரூபாவாகும். (ம-7)

## மாற்றுவழிகளை...

தித் தீர்மானமாக மின் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (ம-7)

## நாட்டில் தடை...

பெறும் குடும்பங்களுக்கும், மத ஸ்தலங்கள், அரச மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு சூரிய ஒளிக் கூரை அமைப்புகளை வழங்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். (ம-7)

## யாழ்.மாவட்டத்...

கள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் அவர்களும் உடனிருந்தார்.

அவர்கள் முதலாவதாக சமயத் தலைவர்களுடன் கலந்தாலோசனை செய்திருந்தனர்.

குறிப்பாக யாழ். மாவட்டத்தில் பெரிதாக பேசப்படுகின்ற போதை தொடர்பாக, புனர்வாழ்வு அளித்தல் தொடர்பாக தன்னார்வ ரீதியில் சமய நிறுவனங்கள் எவ்வாறு அந்த புனர்வாழ்வு பொறிமுறைகளை உருவாக்க முடியும், அதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு எவ்வாறான உதவிகளை செய்ய முடியும் என கலந்தாலோசனை செய்திருந்தனர்.

அதன்பின்னர் வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற சகல பொலிஸ் மா அதிபர்களும் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டனர். அதன் பிரகாரம் யாழ்ப்பாணத்தில், குறிப்பாக வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பாகவும், பொலிஸாருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள் மற்றும் பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (ம-7,104)

## நாடளாவிய...

கரிப்பு நாட்டு மக்களுக்கு மரண தாக்குதலாக அமையும் என துறைமுகம், பெற்றோலியம் மற்றும் மின்சாரம் ஆகிய துறைகளின் ஒன்றிணைந்த சேவை சங்கத்தின் தலைவர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார்.

மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில் வினவியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள பின்னணியில் மின்கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பது நாட்டு மக்களுக்கு மரண தாக்குதலாக அமையும்.

இலங்கை மின்சார சபை தனது பல கால நட்டத்தை ஈடுசெய்வதற்காக இவ்வருடத்தில் மேலதிகமாக 288 பில்லியன் ரூபாயை திரட்டிக் கொள்ள உத்தேசித்துள்ளது.

கடந்த ஐந்து மாத காலத்திற்குள் இருமுறை மின்கட்டணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. தற்போது 66 சத வீதத்தால் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மின்கட்டண அதிகரிப்புக்கு இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு இணக்கம் தெரிவித்துள்ளதாக மின்சாரத்துறை அமைச்சர் கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளமை அடிப்படையற்றது.

இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க மின்கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்த நிலையில் ஆணைக்குழுவிற்குள் முரண்பாடுகளை ஏற்படுத்தி, அரசியல் அழுத்தங்களினால் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்துள்ளார்கள்.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில் அரசாங்கம் உணர்வுபூர்வமாக செயற்படுவதில்லை. தன்னிச்சையாக செயற்படும் அரசாங்கத்திற்கு எதிராக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடுபட வேண்டும். தொழிற்சங்கங்களால் மாத்திரம் தனித்து செயற்பட முடியாது.

மின்கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து துறைமுகம்,பெற்றோலியம் மற்றும் மின்சாரம் ஆகிய துறைகளை ஒன்றிணைத்து நாடளாவிய ரீதியில் ஹர்த்தால் நடவடிக்கையில் ஈடுபட எதிர்பார்த்துள் ளோம். தொழிற் சங்க போராட்டத்திற்கு நாட்டு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.(ம-7)

## 0 முதல்...

214 ரூபாயாக உள்ள மின் கட்டணம் 453 ரூபாய் வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது நூற்றுக்கு 251 வீத அதிகரிப்பாகும்.

31 முதல் 60 வரையான அலகுகளுக்கு உட்பட்ட மின் பாவனையாளர்களுக்கு 677 ரூபாயாக இருந்த மின் கட்டணம் 2 ஆயிரத்து 178 ரூபாயாக அதிகரிக்கின்றது.

இது நூற்றுக்கு 221 வீத அதிகரிப்பாகும்.

61 முதல் 90 வரையான அலகுகளுக்கு உட்பட்ட மின் பாவனையாளர்களுக்கு, ஆயிரத்து 825 ரூபாயாக இருந்த கட்டணம் 9 ஆயிரத்து 370 ரூபாய் வரையில் அதிகரிக்க உள்ளது.

இது நூற்றுக்கு 144 வீத அதிகரிப்பாகும்.

66 சதவீத மின் கட்டண அதிகரிப்பு அமுலில் உள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இதன்படி, 0 முதல் 30 அலகுகள் வரையான மின் கட்டணம் 120 ரூபாயில் இருந்து, 400 ரூபாய் வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

31 முதல் 60 அலகுகள் வரையான மின் கட்டணம் 240 ரூபாயில் இருந்து, 550 ரூபாய் வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

61 முதல் 90 அலகுகள் வரையான மின் கட்டணம் 360 ரூபாயில் இருந்து, 650 ரூபாய் வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

91 முதல் 120 அலகுகள் வரை யான மின் கட்டணம் 960 ரூபாயில் இருந்து, ஆயிரத்து 500 ரூபாய் வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

121 முதல் 180 அலகுகள் வரையான மின் கட்டணம் 960 ரூபாயில் இருந்து, ஆயிரத்து 500 ரூபாய் வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

180 இற்கும் மேற்பட்ட அலகுகளுக்கான கட்டணம், ஆயிரத்து 500 ரூபாயில் இருந்து, 2 ஆயிரம் ரூபாய் வரையில் உயர்த்தப்பட்டுள்ளதாக மின்சார சபை அறிவித்துள்ளது. (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 16/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1488
வெற்றி இலக்கங்கள்
கடகம் 5 8 4 6 5 7
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.02.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1063
H 09 26 29 39
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.02.16
சீட்டிழுப்பு இலக்கம் 3275
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
N 04 07 10 72
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 16/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1381
X 25 10 37 39 74

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.02.16
சீட்டிழுப்பு இலக்கம் 342
தனுசு 14 18 27 61 தனுசு
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/02/16
சீட்டிழுப்பு இலக்கம் 5033
C 6 3 7 1 4 4
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2008
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.02.16
தினம் வியாழக்கிழமை
A 17 32 44 68
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,766,340/-
DLB

வியாழக்கிழமை
சனிதா
சீட்டிழுப்பு திகதி : 2023.02.16
சீட்டிழுப்பு இல : 4169
வர்ணம் : சிவப்பு
ரூ. 4,291,540/-
வெற்றி இலக்கங்கள்
44 50 54 63 N
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,419,880/-
திகதி 2023-02-16
வெற்றி வாரம் 3720
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள்
05 16 41 52
ரூ. 10,783,820/-
DLB

ஆங்கில எழுத்து சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 05 17 40 47 59
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1184
வர்ணம் செம்மஞ்சள்
திகதி 2023.02.16 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 306,430,460.20
DLB DEVELOPMENT LOTTERIES
Web: www.dlb.lk

சங்வர்தன வாஸனாவ
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 571
திகதி 2023-02-16
வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 21 23 33
விதி எண் 03
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 17,105,900/-
DLB DEVELOPMENT LOTTERIES
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1834
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2023.02.16
ரூ. 4,329,880/-
வெற்றி இலக்கங்கள்
09 32 43 50 H
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் கட்டண அதிகரிப்பால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்குக - ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு) பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மின் கட்டணத் திருத்தத்தை அமுல் படுத்துவதினால் சிரமங்களை எதிர்நோக்கும் தரப்பினருக்கு நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் மற்றும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு நேற்று பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, மின் பாவனையாளர்களுக்கு தொடர்ச்சியாக மின்சாரம் வழங்குவதுடன், குறைந்த வருமானம்பெறும்குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல், மத ஸ்தலங்கள் மற்றும் அரச கல்வி நிறுவனங்களுக்கு சூரிய மின் தகடுகளை (Solar Panels) வழங்குதல் ஆகியவற்றில்கவனம்செலுத்துமாறும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

2023 ஜனவரி 05 ஆம் திகதி அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை மின்சார சபையின் (CEB) கட்டணத்திருத்த முன்மொழிவுக்கு, நேற்று முன்தினம் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு (PU CSL) அனுமதி வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம் •சாவகச்சேரி •மானிப்பாய் •நெல்லியடி •பருத்தித்துறை •திருகோணமலை •வல்வெட்டித்துறை •கோப்பாய் •புத்தூர் •பண்டத்தரிப்பு •சங்கானை •கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-5988)

சுய தொழில்வாய்ப்பு - நிறைந்த வருமானம்
V2 TRAVELS CHOLA FOODS CHOLA INTERNATIONAL (P) LTD உடன் இணைந்து
புதிதாக ஆரம்பிக்கும் உணவுப்பொதிகள் விநியோகத்தில் உங்கள் பிரதேசத்திற்கான உணவுப்பொதிகள் விநியோகதாரராக நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்
பகுதிநேரமாக மாதம் 50'000/= மேல் சம்பாதிக்கலாம்
(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
ஆட்டோ/ மோட்டார் சைக்கிள்/சைக்கிள் வைத்திருத்தல் அவசியம்
யாழ் மாவட்டத்தில் எப்பகுதியில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்
V2 TRAVELS 0777-068-777
(C-5988)

குத்தகைக்கு தேவை
வான்கள், கார்கள் குத்தகைக்கு தேவை. தகுந்த கூலி வழங்கப்படும்.
077 489 1279
(14627)

நிரு ரீயூசன் சென்ரர்
கோண்டாவில்
தரம் 3 முதல் தரம் 11 வரை
கல்வியாண்டு 2023
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.
21.02.2023 (செவ்வாய் 3.00 மணி)
தரம் 6 மாணவர்கள் 10 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படும்
(14625)

வீடு வாடகைக்கு
நவாலியில் வீடு வாடகைக்கு உண்டு. வாடகை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு :
077 644 6514
(C-5980)

காணி விற்பனைக்கு
சாவகச்சேரி, நுணாவில் (A9) கண்டி பிரதான வீதி முகப்பாக நிலப்பரப்பு 4 வணிக வளாகங்கள், ஹொட்டல்கள், அமைப்பதற்கும் சகல வியாபார தேவைகளுக்கும் ஏற்ற இடம்.
நல்ல தண்ணீர், நல்ல சூழல்.
•விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
•தரகர் தேவையில்லை.
(14613)
தொடர்புகளுக்கு :- 076 690 6272

CHOLA FOODS CHOLA INTERNATIONAL (P) LTD
CIMS COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
CHOLA FOODS & CIMS COLLEGE
SCHOLARSHIPS
முற்றிலும் இலவச Hotel Management கற்கை நெறிகள்
வேலை செய்துகொண்டே படிக்கும் வாய்ப்பு
• FOOD & BEVERAGE
• COOKERY
• HOUSE KEEPING
• FRONT OFFICE
• DIPLOMA IN HOTEL MANAGMENT
போன்ற மேலும் பல கற்கைநெறிகள்
(கற்கைநெறி முடிவில் NVQ சான்றிதழ் வழங்கப்படும்)
✓ படிக்கும்போதே 25'000/= சம்பளத்துடனான வேலைவாய்ப்புக்கள்
✓ தங்குமிடம், உணவு வழங்கப்படும்
✓ வசதிகளற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
✓ வயதெல்லை 16 தொடக்கம் 25 வரை
✓ இருபாலரும் விண்ணப்பிக்கலாம்
→ மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் ←
நிர்வாகத்தின் தெரிவே இறுதியானது
0777-068-777
(C-5990)

நாவற்குழி திருவாசக அரண்மனை
சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயில்
Shiva ॐ
மகா சிவராத்திரி விழா
(காலம்: 18.02.2023)
எதிர்வரும் மஹாசிவராத்திரி (18.02.2023) அன்று ஆலயத்தில் விசேட பூசைகள், 108 சிவலிங்கங்களுக்கும் பக்தர்கள் அபிஷேகம் செய்யும் நிகழ்வும் நடைபெறும்
(காலை 5.30 மணி தொடக்கம் நள்ளிரவு 12.00 மணிவரை அபிசேகம் செய்யலாம்)
(14626)
சிவபூமி திருவாசக அரண்மனை 021 221 4330


## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 18 . 12 . 1975

மறைவு 20 . 01 . 2023

கடந்த 20.01.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் தலைவர்

### அமரர் இராசநாயகம் வேல்வரதன்

அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 18.02.2023 சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். அந் நிகழ்விலும் 19.02.2023 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வெள்ளைப்புற்றடி, இன்பர்சிட்டி,
பருத்தித்துறை.
நந்தன் : +94 (77) 538 5735

தகவல்:
குடும்பத்தினர்

(C-5981)

## 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 03 . 03 . 1953

மறைவு 20 . 01 . 2023

கடந்த 20.01.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு

### அமரர் சிவசுப்பிரமணியம் இந்திராதேவி

(ஓய்வு நிலை ஆசிரியர், தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை)

அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 17.02.2023 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் தும்பளை முத்துமாரி அம்மன் கோவில் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அந் நிகழ்விலும் 19.02.2023 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சவனாய்,
புலோலி வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்

(C-5982)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.